# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 01 - 2024*

**அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

**கல்வி – 06.01.2024 சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)**

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**கலைவகுப்புகள் - 06.01.2024 சனிக்கிழமை** - வழமைபோல் நடைபெறும்.

மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் தங்களுக்கு நேரடியாக அறிவிப்பார்கள்.

**தைப்பொங்கல் விழா 2024 (13.01.2024)**

13.01.2024 அனைத்து வளாகங்களும் இணைந்து நடாத்தும் அன்னையின் தமிழர் திருநாள் விழா நடைபெறும். அனைத்து மாணவர்கள் ஆசிரியர்களும் இவ்விழாவிற்கு வருகை தரவேண்டும் என்பதற்காக அன்று வழமையான எமது பாடசாலை நடைபெறமாட்டாது. அனைவரையும் வருகை தருமாறு அன்போடு அழைக்கின்றோம்.

**நாள் - 13.01.2024, நேரம் - 11:10 - 19:00, இடம் - Norges Idrettshøgskole, Sognsveien 220, 0863 Oslo.**

**குறிப்பு:**

பொங்கல் விழா நிகழ்வுகளுக்கு தங்களை பதிவு செய்த மாணவர்களுக்கான பயிற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. பயிற்சிகளுக்கான தகவல்கள் உங்களை பதியப்பட்ட குழுக்களூடாக பார்வையிட்டு தவறாது பயிற்சிகளுக்கு செல்ல வேண்டுகிறோம். பெற்றோரும் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**நிர்வாகத் தெரிவுக்குழு 2024**

அடுத்த நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற விருப்பமுள்ளவர்கள் 31.12.2023 இற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என்ற காலவரையறையை மேலும் இரண்டு வாரங்களுக்கு அதாவது 15.01.2024 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

குறைந்தது 4 பேர் நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற தேவைப்படும். விரும்பியவர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

நிர்வாகத் தெரிவுக்குழுவினர் பெயர், தொடர்பு தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் விபரம்:

1. பாணுசல்யா பெனார்ண்டோ- banusalya@yahoo.no - 41931302
2. ஜொய்சி செலினா இராசகுமார் - dr.joicy@outlook.com - 46466205
3. பரகீத்தா ஜீவா - prakeetha@hotmail.no - 95185209

## நிதி

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

## ஆண்டுக்கூட்டம் 2024 - 10.02.2024

ஆண்டுத்திட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது போல் எதிர்வரும் 10.02.2024 நடைபெறும்.
ஆண்டுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் சார்பாக ஏதாவது விடையங்கள் கொண்டுவரவிரும்பின் எமக்கு 25.01.2024 இற்கு முன்னதாக மின்னஞ்சலினூடாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். வழங்கப்பட்ட நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கப்படும் விடையங்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் கருத்தில் கொள்ளப்படும். **ஏற்கனவே அறிவித்ததுபோல் முழுமையான உறுப்பினர் உரிமை பெற்றவர்கள் மட்டுமே ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியும்.**

**சிற்றுண்டிச்சாலை இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.**

*10:15 முதல் வழமைபோல் மேல்க்கட்டிடத்தில் சிற்றுண்டிகள் விற்பனையில் இருக்கும் அனைவரும் அவ்வேளை வந்து பிள்ளைகளுக்காகவோ அல்லது தங்களுக்காகவோ தேவையானவற்றை வாங்கலாம். **தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேனீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும். புரிந்துணர்வுக்கு நன்றி.***

## *முக்கிய கவனம் மற்றும் வேண்டுகோள்!!!!*

1. *மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*
2. *கற்பித்தல் நேரங்களில் கீழ்க்கட்டிடத்தினுள் எந்தப் பெற்றோரும் காத்திருப்பதற்கு ஒப்புதல் இல்லை.*
3. *பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில் **(brannalarm)**, அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி **(brannbil, ambulanse osv)** வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.*
   *வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.*

   *எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி **(brannbil, ambulanse osv)** நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!*

**கவனத்தில் கொள்ளவும்!!!**

*எதிர்வரும் சனிக்கிழமை - போக்குவரத்தில் கவனம் கொள்ளவும்.*
*காலநிலை மற்றும் நிலவழுக்கல் காரணமாக பாடசாலையில் இருந்து செல்பவர்கள் பாடசாலையை நோக்கிவருபவர்களுக்கு இடம்விட்டு செல்லும்படி கேட்டுக்கொள்கின்றோம்.*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!